**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.42/2020 - DW-1**

| | |
|---|---|
| Name | திரு.முருகானந்தம் |
| Father Name | திரு.வேலு |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **19.01.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வாதி அசோகன் என் உடன் பிறந்த இளைய சகோதரர். 2-ம் பிரதிவாதி என் தாயார். 3-ம் பிரதிவாதி என் சகோதரி. 4-ம் பிரதிவாதி என் மனைவி. வாதி பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் 3-வது இனச் சொத்தை தவிர்த்து மற்ற சொத்துகளை பொறுத்து வாதி கோரியப்படி அவரது பாகத்தை பிரித்து கொடுப்பத்தில் எனக்கு ஆட்சேபனை இல்லை. 5-வது இனச் சொத்துகள் நானும், வாதியும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்துகள் தானா என்றால் அந்தச் சொத்துகளை நான் மட்டும் தான் கிரையம் வாங்கினேன். நான் மட்டும் தான் தனிப்பட்டு அந்தச் சொத்துகளை கிரையம் வாங்கினேன் என்பதற்கு என் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் என்னிடம் உள்ளது. வழக்கு 3-வது இனச் சொத்துகள் என் தந்தை கிரையம் பெற்ற சொத்துகளா என்றால் என் தந்தை ஒரு ஏக்கர் 16 சென்ட் சொத்தை கிரையம் வாங்கினார். அந்த ஒரு ஏக்கர் 16 சென்ட் சொத்தில் 58 சென்ட் சொத்தை என் தந்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகாவது வாதிக்கு என் தந்தை 58 சென்ட் சொத்தை கிரையம் செய்து கொடுத்தாரா என்பது பற்றி பத்திரம் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். 2019-ம் ஆண்டு நகல் வாங்கி பார்த்தேன். 3-வது இனச் சொத்துகளில் ஒரு ஏக்கர் 16 சென்ட் சொத்தில் 48 சென்ட் சொத்தை என் மனைவி 4-ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரம் என் தந்தை கிரையம் வாங்கியதற்கு பிறகு ஏற்பட்டது என்றால் அதற்கு முன்பே 4-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டார். என் தந்தை அந்த ஒரு ஏக்கர் 16 சென்ட் சொத்தை 07.08.2002-ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 4-ம் பிரதிவாதி 13.02.2003-ம் தேதி கிரையப்பத்திரம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தை கிரையம் பெறுவதற்கு முன்பே 4-ம் பிரதிவாதி கிரையம் பெற்றது போல் காண்பிப்பதற்காக முன் தேதியிட்டு 03.01.2002-ம் தேதி அந்த கிரையப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்த பிறகு வழக்கு 3-வது இனச் சொத்திற்கு வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள்

பெயர்களுக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது. என் மனைவி பெயரிலோ அல்லது என் மனைவிக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் மணி என்பவர் பெயரிலோ பட்டா இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு 3–வது இனச் சொத்துகளில் நான்கு எல்லைகளில் ஏதாவது ஒரு எல்லையில் எனக்கோ அல்லது என் மனைவிக்கோ சொத்து உள்ளதா என்றால் எனக்கும், என் மனைவிக்கும் உள்ளது. அந்த ஒரு ஏக்கர் 16 சென்ட் சொத்திற்கு மேற்கு பக்கத்தில் எனக்கு சொத்துள்ளது. அந்த சொத்தின் சர்வே எண்கள்.50/1 மற்றும் 21/2 ஆகும். அந்த இரண்டு சர்வே எண்கள் தான் 5–வது இனச் சொத்துகளில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3–வது இனச்சொத்தில் பொது கால்வாய் எதுவும் இல்லை. என் தந்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள 58 சென்ட் சொத்து போக மீதமுள்ள சொத்தில் 3–வது இன சொத்தின் வாதிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்பத்தில் கடன்கள் செலுத்த வேண்டியது உள்ளது என்பதை காண்பிக்க என்னிடம் ஆவணங்கள் உள்ளது. கூட்டு குடும்ப கடன்கள் எதுவும் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.